## தலைப்பு 208 - தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 208 - தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(i)** | 4.6317 ஹெக்டயரைக் கொண்ட தேசிய நூதனசாலையின் காணி மற்றும் கட்டடங்கள் 2013 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 10,800,000,000 ஆன மதிப்பீட்டுப் பெறுமதிக்கு நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த சொத்து மதிப்பீடு செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு வரையில் 11 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தினால் 2018 திசம்பர் 31 ஆம் திகதி வெளியிடப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டலின் (2) பந்தியில் | தேசிய நூதனசாலை திணைக்களத்தின் கட்டடங்கள் மற்றும் காணியினை மதிப்பீடு செய்வதற்காக பல தடவைகள் மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், தற்போது அதன் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மூன்று நாட்கள் வருகை தந்து அதன் அனைத்து அளவீட்டு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு உள்ளதுடன், மதிப்பீட்டு அறிக்கையினை எதிர்வரும் நாட்களில் வழங்குவதாக உறுதியளித்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளை தயாரிக்கும் போது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்த வகையில் காணி மற்றும் கட்டடங்கள் மீள மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **(ii)** | திணைக்களத்துக்குச் சொந்தமான ஏனைய பிராந்திய நூதனசாலைகளான சுதந்திர நினைவுச் சின்ன நூதனசாலை, கண்டி தேசிய நூதனசாலை, அனுராதபுர பொது நூதனசாலை மற்றும் காலி தேசிய நூதனசாலை என்பவை தொடர்பான காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையினைப் பெற்றுக் கொண்டு பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுதந்திர நினைவுச் சின்ன நூதனசாலை உள்நாட்டு அலுவலக அமைச்சுக்கு சொந்தமானது எனவும், கண்டி தேசிய நூதன சாலையின் காணி பயன்பாட்டு உரிமை மட்டுமே திணைக்களத்திடம் உள்ளது எனவும், அனுராதபுர பொது நூதக சாலை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவில்லை எனவும், காலி தேசிய நூதன சாலையை ஒப்படைப்பதற்கு உரிய நிறுவனங்களிடம் இருந்து மீண்டும் இணக்கப்பாட்டினைக் கோரி அனுப்பப்பட்டுள்ளது எனவும் பொலனறுவை புராதன தொழில்நுட்ப நூதன சாலையை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | திணைக்களத்துக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது. |
| **(iii)** | நிதிக்கூற்றுக்களில் ACA 02 படிவத்தில் மென்பொருள் அபிவிருத்திக்காக கணக்காய்வு ஆண்டில் செலவிடப்பட்ட பெறுமதி ரூபா 3,778,343 ஆன போதிலும், கணணியில் அச்சிடபட்ட SA 82 படிவத்திற்கமைய மென்பொருள் அபிவிருத்திக்கான கொள்வனவாக ரூபா 3,870,023 காட்டப்பட்டிருந்ததுடன், அதன் வித்தியாசம் ரூபா 91,680 ஆகும். | 2024 ஏப்ரல் மாத செலவுகள் கணக்கீடு செய்யப்படும் போது ரூபா 91,680 ஆன பெறுமதி தவறுதலாக 208-02-02-2106 செலவு விடய வரவு வைக்கப்பட்டிருந்ததனால் 2024 மே மாதம் அதனை திருத்துவதற்காக 208-02-03-011-2106-13 எனும் சரியான செலவு விடயத்திற்கு பேரேட்டு வவுச்சர் ஒன்று CIGAS கணினி மென்பொருளுக்கு உள்ளீடு செய்யப்பட்டது. அதன் காரணமாக அந்த பெறுமதி இரு தடவைகள் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்ட தவறினைத் திருத்துவதற்கு CIGAS ஒழுங்கமைப்பிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், | நிதிக்கூற்றுக்களை சரியாகத் தயாரித்தல் வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | | அதன் மூலம் பேரேட்டு மீதி மட்டும் குறைவாகக் காட்டப்பட்டதுடன், BOS Report இல் அந்த பெறுமதி அகற்றப்பட்டிருக்கவில்லை. அதனை 2025 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு உரிய செம்மையாக்கல் மேற்கொள்ளப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| **(iv)** | நிதி செயலாற்றுகைக் கூற்றுக்கு அமைய மூலதன சொத்துக்களைக் கையகப்படுத்துதல் மற்றும் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA 6) சொத்துக்களை கொள்வனவு செய்தலுக்கிடையே ரூபா 4,564,665 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | மானுடவியல் பிரிவுக்கு அலுமாரி கொள்வனவு செய்வதற்காக கைத்தொழில் திணைக்களத்திற்கு இந்த ஒதுக்கீட்டினை ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும், கணக்குகள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பம் வரையிலும் குறித்த அலுமாரி திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | ஆண்டினுள் கொள்வனவு செய்தலுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் குறித்த ஆண்டினுள் சொத்தினைப் பெற்றுக் கொள்வதற்கும், கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) முற்பண மீதி**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(i)** | 2024 ஆம் ஆண்டுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கூற்றில் (ACA 03) 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் திணைக்கள ஏடுகளுக்கு அமைய மீதி ரூபா 3,562,756 ஆக காட்டப்பட்ட போதிலும், வருட இறுதியில் முற்பண மீதி திறைசேரிக்கு மாற்றப்பட்டதன் பின்னர் சரியான மீதி ரூபா 687,338 ஆக இருந்ததனால் வித்தியாசம் ரூபா 2,875,418 ஆக இருந்தது. | ACA - 03 இல் பணத்தின் மூலம் முற்பணத்தினை தீர்த்ததாக வருட இறுதி மீதியான ரூபா 2,875,418 உள்ளடக்கப்படுமாயின் 2024.12.31 ஆன திகதியில் நிறுவன ஏடுகளுக்கு அமைய மீதி ரூபா 687,338 ஆக இருக்கும். அப்போது 2024.12.31 ஆம் திகதியில் திறைசேரி ஏடுகளுக்கு அமைய மீதியான (SA - 70 படிவம்) ரூபா 3,562,756 உடன் சமனாகாது. மேலும், 2022, 2023 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் போதும், வருட இறுதி நிதியின் மூலம் முற்பணத்தினைத் தீர்த்தலாக காட்டப்பட்டு | முற்பணக் கணக்கு தொடர்பான கூற்றில் தற்போதைய முற்பண மீதி சரியாகக் காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இருக்காதுடன், எதிர்வரும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதன் மூலம் காட்டப்பட்டுள்ள வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| **(ii)** | 2024 திசெம்பர் 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 6/2024 கொண்ட அரச நிதி வழிகாட்டலின் 7.4 ஆம் பந்தியின் பிரகாரம் வருட இறுதியில் திறைசேரிக்கு மாற்றப்பட்ட ரூபா 2,875,418 திறைசேரிக்கு மாற்றப்பட்டதாக (ஈ) நிதி செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், அந்த மீதி 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முற்பண மீதியாக நிதி செயலாற்றுகை கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட நிதி செயலாற்றுகைக் கூற்றில் காசேட்டினைத் தீர்த்து பண மீதி மாற்றப்படுதல் சரியான முறையில் கணக்குகளின் மூலம் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வருட இறுதி முற்பண மீதி 7.4 ஆம் பந்தியின் அறிவுரைகளுக்கு அமைய உள்ளடக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் நிதிக் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது. |

**2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 13 மீண்டெழும் செலவு விடயங்களுக்கான மொத்த நிகர ஒதுக்கீடு ரூபா 17,800,000 ஆக இருந்ததுடன், செலவு ரூபா 8,923,753 ஆகவும் சேமிப்பு ரூபா 8,876,247 ஆகவும் இருந்தது. அந்த சேமிப்பு நிகர ஒதுக்கீட்டின் 31 சதவீதம் தொடக்கம் 88 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | 2024.01.10 ஆம் திகதி இடப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினை கட்டுப்படுத்துதல், எதிர்பார்க்கப்பட்ட வகையில் எரிபொருளுக்கான செலவிவிடல் இடம் பெறாமை, சுத்திகரிப்பு சேவை செலவு விடயத்தில் எதிர்பார்க்கப்பட்ட வகையில் செலவு இடம்பெறாமை, எதிர்பார்க்கப்பட்ட வகையில் நடமாடும் கண்காட்சி நடாத்தப்படாமை, எதிர்பார்க்கப்பட்ட வகையில் உத்தியோகத்தர்களிடம் இருந்து கோரிக்கை சமர்ப்பிக்கப்படாமை, இடமாற்றம் பெற்றுக் கொண்டமை மற்றும் ஓய்வூதியம் பெற்றுச் சென்றமை மற்றும் பல்பணி உதவியாளர்கள் சேவையிலிருந்து விலகிச் சென்றமை போன்றவற்றால் அவர்களுக்கு சம்பளம் வழங்கல் இடம்பெறாததனால் ஒதுக்கீடு மீதியாக இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | முறையான ஆய்வினைக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது. |
| (ஆ) 05 மூலதன செலவு விடயங்களுக்கான மொத்த நிகர ஒதுக்கீடு ரூபா 185,475,886 ஆக இருந்தத்துடன், செலவு ரூபா 121,965,905 மற்றும் நிதியேற்பாடுகளிலான சேமிப்பு ரூபா 63,509,981 ஆக இருந்தது. அந்த மீதி நிகர ஒதுக்கீட்டின் 30 சதவீதம் தொடக்கம் 59 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | குறித்த பணி பூர்த்தியடையாததனால் செலவு இடம் பெறாமை, வெளிநாட்டு மானியங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டம் 2025 ஏப்ரல் மாதம் வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டமை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டினை விடக் குறைந்த செலவில் குறித்த பணியினைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தமை போன்ற | முறையான ஆய்வினைக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | | காரணங்களினால் ஒதுக்கீடு மீதியாகி இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |

**3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 208-2-2-0-2103 செலவு விடயத்தின் கீழ் தீ பாதுகாப்பு ஒழுங்கமைப்பினைத் தாபிப்பதற்கு மொத்த நிகர ஒதுக்கீடு ரூபா 180,000,000 ஆக இருந்தவுடன், ஆண்டிற்கான செலவு ரூபா 180,000,000 ஆகும். அவ்வாறு இருந்த போதிலும், வருட இறுதியில் ஒதுக்கீட்டினை விஞ்சி ரூபா 21,884,027 ஆன பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளும் ஏற்பட்டிருந்தன. | 2024 ஆம் ஆண்டுக்காகக் கோரப்பட்டிருந்த ஒதுக்கீடு போதாமல் இருந்தமையும் , அதற்குத் தேவையான மேலதிக ஒதுக்கீட்டினைக் கோரி 2024 ஆம் ஆண்டினுள் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார நடவடிக்கை அமைச்சின் செயலாளரது ஒப்பத்துடனான கடிதம் ஒன்று பாதீட்டுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், குறித்த ஒதுக்கீடு கிடைக்காததனால், இந்த செலவின் ஒரு பகுதியான ரூபா 21,884,027 தொகை 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் பொறுப்புகளுக்கு உட்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | ஆண்டுக்கான ஒதுக்கீட்டினை விஞ்சி பொறுப்புக்களுக்கு உட்படலாகாது என்பது. |
| (ஆ) | 2017 ஏப்ரல் 27ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 255/2017 கொண்ட அரச கணக்கீட்டு சுற்றறிக்கையின் 03 ஆம் மற்றும் 04 ஆம் இலக்க பந்திகளுக்கு அமைய கடப்பாடுகள், பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்த்தல் செயற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் திணைக்களத்தினால் CIGAS கணக்கீட்டு ஒழுங்கமைப்பு நாளாந்தம் நாளதுவரையாக்கப்பட்டு இருக்கவில்லை. | ஆண்டினுள் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது கடப்பாடுகள், பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்த்தல் செயற்பாடுகளைச் சரியாக மேற்கொள்ளுவதுடன்இ ஆண்டு இறுதியில் தீ பாதுகாப்பு ஒழுங்கமைப்பிற்கு உரிய இறுதி பட்டியல் திசெம்பர் மாத இறுதியில் கிடைத்ததாகவும், ஒதுக்கீடு போதாது என்பதனால், பயன்படுத்திய பட்டியலுக்கான ஒதுக்கீடு போதாமை மற்றும் பின்னர் | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

கிடைத்த வவுச்சர் காணப்பட்டதனாலும் இந்த வேலைத்திட்டங்களுக்கு உரியதாக மட்டும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக CIGAS ஒழுங்கமைப்பினுள் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## 3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்தி மற்றும் 2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையில் இலக்கம் 3.1 இன் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 113 (6) மற்றும் வழிகாட்டல் இலக்கம் 01 இன் (உ) மற்றும் (ஊ) | 1,111,512 | 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் சேவையைக் கைவிட்டுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,111,512 ஆன கடன் மீதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024.12.31 ஆம் திகதியில் சேவையைக் கைவிட்டுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,152,445.00 ஆன மொத்த கடன் மீதியைத் தீர்ப்பதற்கு புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் அமைச்சின் மூலம் உரிய அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கான கோரிக்கைக் கடிதம் 2024 ஆம் ஆண்டில் அந்த அமைச்சிடம் அனுப்பப்பட்ட போதிலும் அதற்குரிய அனுமதி 2025 பெப்ரவரி மாதத்திலேயே | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கிடைத்திருநதநது. அதன் காரணமாக அந்தக் கடன் தொகையினை அறவிட முடியாதிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ii) | 2024 ஜூலை 02 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் அமப/24/1125/620/020 கொண்ட அமைச்சரவைத் தீர்மான இலக்கம் 31 (I) மற்றும் (II ) | - | 2024 ஆம் ஆண்டில் இரத்தினபுரி தேசிய நூதனசாலை கட்டடத்தின் பாதுகாப்பின் பழுது பார்த்தல் நடவடிக்கையினை உடனடியாக ஆரம்பிக்குமாறு தெரிவித்த போதிலும், அறிக்கையிடும் தினம் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டடத் திணைக்களத்தினால் முன்னைய விலைமனு கோரலின் கலந்துரையாடல் 2024.10.02 ஆம் திகதி இரத்தினபுரி தேசிய நூதனசாலை வளாகத்தில் நடாத்தப்பட்டிருந்ததுடன், இந்தக் கலந்துரையாடலின் போது ஏற்பட்ட பிரச்சனைக்குரிய சூழ்நிலை காரணமாக 2024 ஆம் ஆண்டில் இந்தப் பணி மேற்கொள்ளப்படவில்லை எனக் கட்டடத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டுக்குரிய பயன்பாட்டு செயற்திட்டத்தின் கொள்முதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்குரிய திட்டத்துடன் மேற்கொண்டு செல்லுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | 2019 திசெம்பர் 17 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் PED/e-GP/Circular/2018 கொண்ட நிதி பொருளாதாரம் மறறும் கொளடகை அபிவிருத்தி அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் 2018 ஒக்டோபர் 23 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் PED/e-GP/Circular/2018 கொண்ட நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் சுற்றறிக்கை | - | சுற்றறிக்கையின் பிரகாரம் இலத்திரனியல் கொள்முதல் மேற்கொள்ளுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு தொடக்கம் முடிந்தளவு அனைத்து சந்தர்ப்பங்களிலும் கொள்முதல் நடவடிக்கைகள் இலத்திரனியல் கொள்முதல் முறைமையைப் பயன்படுத்தி மேற்கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் இலத்திரனியல் கொள்முதல் மேற்கொள்ப்பட வேண்டும் என்பது. |

### 3.4 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலி கடல்சார் நூதனசாலையில் பார்வையாளர்களுக்கு வழங்கப்படும் நுழைவுச் சீட்டு வருமானத்தினை வங்கியிலிடும் போது இடம்பெற்றுள்ள ஊழியர் மோசடி தொடர்பில் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மற்றும் நிதிப் பிரமாணம் 104 (3) ஆரம்ப அறிக்கைக்கு அமைய திணைக்களத்தினால் இழக்கப்பட்டுள்ள மொத்த வருமானம் ரூபா 1,652,605 ஆகும். இது தொடர்பில் நிதிப் பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் முழுமையான விசாரணை அறிக்கை ஒன்று விசாரணையின் பின்னர் நட்டம் ஏற்பட்ட தினத்தில் இருந்து மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2025 மார்ச் 26 ஆம் திகதி கணக்காய்வுத் தினம் வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு செயலாளரின் இலக்கம் CA/1/1/24/22 மற்றும் 2024.10.23 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் நிதிப் பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் முழுமையான அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு இதுவரையில் ஒரு தடவை கூட்டப்பட்டுள்ளது. இந்த விசாரணைக் குழுவில் அங்கத்தவர்களாக அமைச்சின் கலாச்சார பிரிவின் பிரதான கணக்காளர் நியமிக்கப்பட்டுள்ளார். 2024 ஆம் ஆண்டில் கணக்குகளைத் தீர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததனால் விசாரணை சபை மீண்டும் கூட்டப்படுவதற்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை. விரைவில் சபை மீண்டும் கூட்டப்பட்டு நிதிப் பிரமாணம் 104 (4) | நிதிப் பிரமாணம் 104 (4) என் பிரகாரம் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தீர்மானிக்கப்பட்ட நட்ட சேதத்தினை அறவிடுதல் வேண்டும். |

இன் பிரகாரம் முழுமையான அறிக்கையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அதன் அங்கத்தவர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் தொல்பொருள் கூட்டு முகாமைத்துவ கொள்கை ஒன்றை 2024 திசெம்பர் மாதம் வரை வெளியிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே இலங்கையினுள் காணப்படும் மொத்த நூதனசாலை தொகுதியையும் ஒழுங்குபடுத்தும் அதிகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கு கிடைக்கும் வகையில் காணப்படும் சட்டத்திற்கு உரிய திருத்தங்களை மேற்கொண்டு நூதனசாலைகள் துறையில் ஒழுங்குபடுத்தல் அதிகாரம் கிடைக்க வேண்டிய தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கு அந்த அதிகாரத்தை பெற்றுக் கொள்ளவும் செயற்பட்டிருக்கவில்லை. | தொல்பொருள் முகாமைத்துவக் கொள்கையானது 03 அத்தியாயங்கள் மற்றும் 15 உப தலைப்புகளை உள்ளடக்கியது. இந்தப் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டு அதில் 02 அத்தியாயங்கள் (முக்கிய பகுதி) மற்றும் 10 உப தலைப்புக்களுக்கு உரிய கொள்கைகள் வரைவு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2025 ஜுலை 31 ஆம் திகதி அளவில் மீதி பகுதியையும் பூர்த்தி செய்து வெளிவாரி அறிஞர்களிடம் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுதல், பொதுமக்களின் கருத்துக்களை விசாரித்தல் போன்ற செயல்களை மேற்கொண்டு அமைச்சின் செயலாளரின் மூலம் தேசிய கொள்கை உருவாக்கல் குழுவிடம் சமர்ப்பித்து அதன் பரிந்துரையுடன் அமைச்சரவை அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த பணி நிறைவு பெறும். அதற்காக 2025 ஆம் ஆண்டு இறுதி வரையில் இந்த பணியினை பூர்த்தி செய்து இந்த | தொல்பொருள் கூட்டு முகாமைத்துவக் கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் மொத்த நூதனசாலைகள் தொகுதியையும் ஒழுங்குபடுத்தும் அதிகாரம் கிடைக்கும் வகையில் காணப்படும் சட்டத்தை திருத்த வேண்டும் என்பது. |

| | | |
|---|---|---|
| | கொள்கையினை செல்லுபடியாகும் கொள்கையாக வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) நூதனசாலைகள் தொடர்பான நெறிமுறைகள் ICOM (International Council of Museums) நிறுவனத்தினால் நூதனசாலை விடய துறையினுள் பாரிய வீச்சினை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த நெறிமுறைகள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் சட்ட விதிகள் கட்டளைகள் மற்றும் கொள்கைகளுக்குப் பொருத்தமான வகையில் வரைவு செய்தல் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நடவடிக்கைகள் 2025 மே 14 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | ICOM அமைப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ள நூதனசாலைகள் தொடர்பான நெறிமுறை ஒழுங்கமைப்பு தேசிய நூதனசாலை திணைப்ளத்தினாலும் பின்பற்றப்படுகின்றது. எனினும் இலங்கையின் சட்ட விதிகள், கட்டளைச் சட்டங்கள், கொள்கைகளுக்கு அமைய வேறாக தயாரிக்கப்படுதல் வேண்டும். தற்போது அந்தக் கொள்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | நாட்டுக்குப் பொருத்தமான வகையில் ICOM மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நெறிமுறைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது. |

**4.2 திட்டமிடல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 03,04 பந்திகளின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டுக்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் நடப்பு ஆண்டில் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு | திருத்தப்பட்ட வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு உரியதாக, புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் அமைச்சின் மூலம் அமைச்சு செயலாளர் மற்றும் மேலதிக செயலாளரிடம் (கலாச்சார மேம்பாடு) 2025 பெப்ரவரி | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது மற்றும் செயற்பாட்டுத் திட்டத் திருத்தங்களுக்கு உரிய அனுமதியானது அந்த சந்தர்ப்பத்திலேயே பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது. |

| | |
|---|---|
| முன்ன மற்றும் வருடாந்த கொள்முதல் திட்டம் நடப்பு ஆண்டு திசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அனுமதியுடன் அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2024 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு திட்டம் மற்றும் கொள்முதல் திட்டம் 2024 மார்ச் 04 ஆம் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு திட்டம் திருத்தப்பட்டதற்கு உரிய அனுமதி, நிதிக் கூற்றுக்களுக்கான அனுமதியினை வழங்கிய தினமான 2025 பிப்ரவரி 24 ஆம் திகதியிலேயே பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு அமைய மீளாய்வாண்டு செயற்பாட்டுத் திட்டம் திருத்தப்பட்டதற்கு உரிய அனுமதி குறித்த நிதி ஆண்டு பூர்த்தி அடைந்ததன் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2025 பெப்ரவரி 24 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

## 4.3 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2024 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 02 மில்லியன் ஒதுக்கீட்டின் அடிப்படையில் கொழும்பு தேசிய நூதனசாலைக்கான பெயர்ப் பலகையினைத் தயாரிப்பதற்கு உரிய பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெயர்ப் பலகையினைத் தயாரிப்பதற்கான திட்டம் மற்றும் மதிப்பீடு கட்டிட திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 5,092,000 ஆகும். | திட்டங்கள் தயாரிக்கும் போது ஒதுக்கீட்டு தேவைப்பாடு தொடர்பில் அதிக கவனத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | இந்த செயல்திட்டத்திற்காக கிடைத்திருந்த ரூபா 02 மில்லியன் தொகை போதாத காரணத்தினால் அப்போதைய அவசர மற்றும் அத்தியாவசியப் பணியாக ஒதுக்கீடு தேவையாக இருந்த பின்புற காவல் கூடாரத்தின் அண்மையில் நிலத்தடி மின் கம்பிகளை இடுவதற்காக அந்தத் தொகை பயன்படுத்தப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு கிடைத்துள்ளது என்பதனால் அந்தப் பணியினை இந்த ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | கொழும்பு தேசிய நூதன சாலையின் சாளரங்கள் திருத்த வேலை, தேசிய நூதனசாலை திணைக்களத்தின் பாதுகாப்பு நிலத்தடி மின் கம்பிகளை இடுதல், இயற்கை விஞ்ஞான நூதன சாலையில் மழை நீரேந்தல் திருத்த வேலை மற்றும் லக்சல கட்டடத்தின் திருத்த வேலை செய்தல் போன்ற ரூபா 7.213 மில்லியன் பெறுமதியான 04 செயற்திட்டங்கள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தினுள் அந்தப் பணிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறு இருந்த போதிலும் அவசர தேவைப்பாடுகளின் அடிப்படையில் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளாயின் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தினைத் திருத்தி உரிய தரப்பினரிடம் இருந்து அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டடத்தின் வெளிப்புற மட்டத்தில் இருந்து சாளரங்கள் அமைக்கப்பட்டுள்ள இடம் வரையில் உயரம் மற்றும் அதன் ஆபத்து தொடர்பில் கவனத்தில் கொண்டு Scaffolding பயன்படுத்தி அவற்றை பாதுகாப்பாக அமைத்தலை மேற்கொள்ளுதல், இந்த மின் கம்பிகள் திடீரென அறுந்ததனால் ஏற்பட்ட பாதுகாப்பற்ற தன்மை காரணமாக அதனை மிக விரைவில் பாதுகாப்பானதாக மாற்ற வேண்டும் என்பதனால் 2024 ஆம் ஆண்டிலேயே இந்த நிலத்தடி மின் கம்பி இடும் பணி கட்டட திணைக்களத்தின் ஆலோசனையின் கீழ் மேற்கொள்ளுதல், மழை நீரேந்தல் திருத்தப் பணிகள் 2024.06.24 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மழை நீரை முறையாக வெளியேற்றுவதற்கு | அவசர அத்தியாவசியங்கள் ஏற்படுமிடத்து ஆண்டு இறுதிக்கு முன்னர் திட்டம் திருத்தப்பட்டு அதற்குப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பாடு செய்ததன் மூலம் கூரை இற்றுப் போவதையும் மற்றும் சுவர்களில் நீர் கறைகள் படிந்து நிறம் மங்குவதையும் தடுக்கக் கூடியதாக இருத்தல் மற்றும் ரூபா 48 மில்லியன் மதிப்பீட்டிற்குரிய ஒதுக்கீடு 2024 ஆம் ஆண்டில் இல்லை என்பதனாலும் மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு திட்டத்தில் பல பணிகள் இரத்துச் செய்யப்பட்டு ரூபா 02 மில்லியன் தொகை கட்டட திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டு லக்சல கட்டடத்தின் நீர் கசியும் இடங்களை சரி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. ரூபா 07 மில்லியன் மதிப்பீட்டிற்கான ஒதுக்கீடு இல்லை என்பதனால் ரூபா 02 மில்லியனை ஒப்படைத்து அத்தியாவசியமான பணிகள் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | நூதனசாலை வளாகத்தைச் சுற்றியுள்ள புராதன நினைவுச் சின்ன மதில் சுவர் மற்றும் வலை வேலிகளை திருத்துதல், கொழும்பு நூதனசாலையின் கூரை திருத்த வேலை மற்றும் அனுராதபுர பொது நூதனசாலையின் காட்சிக் கூடத்தினை நவீன மயப்படுத்துதல் ஆகிய 03 செயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவு ரூபா 33 மில்லியனாக இருந்ததுடன், 2024 ஆம் ஆண்டில் அந்த செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நூதனசாலை வளாகத்தைச் சுற்றியுள்ள புராதன நினைவுச் சின்ன மதில் சுவர் மற்றும் வலை வேலி திருத்த வேலைப் பணிகள் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், கேட்போர் கூட கட்டடத்தின் கூரை அமைந்துள்ள கொங்கிரீட் தளத்தில் நீர் கசிவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் கடப்படையினரால் இந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், நூதனசாலை போலீஸ் காவலரண் அமைந்துள்ள கட்டடத்தின் கூரையில் | செயற்திட்டங்கள் விரைவில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என்பது. |

உள்ள கொங்கிரீட் தளத்திலும் நீர் கசிவதைத் தடுப்பதற்காக திருத்த வேலை நடவடிக்கைகள் 2025 ஜூன் மாதம் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பணிகள் 2025.12.31 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் மற்றும் அனுராதபுர பொது நூதனசாலையில் உள்ளக காட்சிக்கூடத்தினை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்தல் உரிய காலத்தில் மேற்கொள்ளுவதற்கு முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொல்பொருட்கள் பொறுப்பு மற்றும் பாதுகாத்தல் தொடர்பான சிக்கல்கள், அவற்றுக்குரிய கோவைகளை முறையாகப் பேணாமை, உத்தியோகத்தர்கள் மாறும் போது பொருட்களுக்கான பொறுப்புக்கள் முறையாக ஒப்படைக்கப்படாமை போன்ற திணைக்களத்தின் உள்ளக நிர்வாக குறைபாடுகளினால் 1877 ஆம் ஆண்டு தொடக்கம் 1957 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு உரியதான 07 தொல்பொருள் வகைகளுக்கு உரியதான பொருட்கள் காணாமல் | இது தொடர்பாக சபை ஒன்று நியமிக்கப்பட்டு முழுமையான அறிக்கையினைத் தயாரித்து நிதிப் பிரமாணம் 105 (2) (இ) ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்காக 2024.04.24 ஆம் திகதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சின் மூலம் 2024.05.28 ஆம் திகதி இது தொடர்பில் மேலதிக அறிக்கை ஒன்று கோரப்பட்டதுடன் 2024.06.25 ஆம் திகதி குறித்த மேலதிக தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 105 (2) (இ) ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | போயுள்ளதுடன், இந்த நட்டம் தொடர்பில் நிதிப் பிரமாணம் 105(2)(இ) இன் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு திறைசேரி பிரதி செயலாளரது கட்டளையினைப் பெற்றுக் கொள்வதற்கு அறிக்கையிடும் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இயற்கை விஞ்ஞான நூதனசாலையில் உயிரியல் விஞ்ஞான கூடத்துடன் இணைந்ததாகக் காணப்படும் இரண்டாவது மாடியில் இடது பக்கப் பகுதி முழுமையாக மூடப்பட்டு 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலும் பொதுமக்களின் காட்சிப்படுத்தலில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், தேவையான திருத்த வேலைகள் மேற்கொண்டு பொதுமக்கள் காட்சிக்குத் திறப்பதற்கு அல்லது பயனுள்ள வேறு பணிகளுக்கு இந்தப் பகுதியினைப் பயன்படுத்துவதற்கு 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 10 காட்சிக் கூடங்களுக்கு காட்சிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட முன்மாதிரி தெரிவு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ள 10 கூடங்களுக்குள் பின்புல வர்ணம் பூசப்பட்டு திருத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 06 கூடம் தொடர்பான பிரதான காட்சிப் பலகைகள் மற்றும் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட காட்சிப் பலகைகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், கூடத்தின் கூரை உருவாக்குதல், நிலத்தினைப் பண்படுத்துதல் மற்றும் வளி சீராக்கி அமைத்தல் போன்ற பணிகளை ஒப்படைக்கும் கடிதங்கள் இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | தேவையான திருத்த வேலைகளை மேற்கொண்டு பொதுமக்களின் காட்சிக்காகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பது. |

## 4.5 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு தேசிய நூதனசாலையில் 2012 மார்ச் 16 ஆம் திகதி இடம்பெற்ற மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 4,440,140 ஆன 221 தொல்பொருட்கள் களவாடல் இடம்பெற்று 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 12 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும், உரிய குற்றவாளிகளுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படாத காரணத்தால் இதுவரையிலும் வழக்கு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு முடியாதுள்ளது. | கொழும்பு தேசிய நூதன சாலையில் 2012.03.16 ஆம் திகதி களவாடப்பட்ட பொருட்களுக்காக நிதிப் பிரமாணம் 104(3) இற்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சு செயலாளரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. தற்போது காணாமல் போய் மீள கண்டுபிடிக்கப்பட்ட இந்த பொருட்கள் முத்திரையிடப்பட்டு நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ளது. வழக்கு நடவடிக்கைகள் நிறைவடையும் வரையில் இந்தப் பொருட்களின் முத்திரையினை அகற்ற முடியாது என்பதனால் அந்த நடவடிக்கைகள் நிறைவடையும் வரையில் நிதிப் பிரமாணம் 104(3) இற்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு முடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த தரப்பினருடன் தொடர்பாடல் பேணப்பட்டு தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்படுவதன் மூலம் வழக்கு நடவடிக்கைகளை விரைவுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் நுழைவுச் சீட்டு அச்சிடும்போது, ஏனைய நூதனசாலைகள் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான 03 வருட காலப் பகுதியினுள் மேற்கொண்ட பொது வருடாந்த நுழைவுச்சீட்டு விண்ணப்பம் தொடர்பில் கருத்தில் கொள்ளாது, ஒரே தடவையில் | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் பின்னர் ஏற்பட்ட சுற்றுலா துறையின் மறுமலர்ச்சியுடன் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனும் எதிர்பார்ப்பில் மீண்டும் நுழைவுச் சீட்டுக்களை அச்சிடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் | நவீன தொழில்நுட்ப முறைமைகளுக்கு அமைய நுழைவுச் சீட்டுக்களை வழங்கும் ஒழுங்கமைப்பொன்று தயாரிக்கப்படல் வேண்டும் என்பது. |

| | |
|---|---|
| நுழைவுச்சீட்டுப் புத்தகங்கள் 500 தொடக்கம் 2000 இற்கு இடையில் தொகையாக டிக்கெட் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தன. திணைக்களத்தின் செலவுப் பேரேட்டுக்கு அமைய 2022 ஆம் ஆண்டில் 100 நுழைவுச் சீட்டுக்களை அச்சிடுவதற்காக ரூபா 1,698,148 உம், 2023 ஆம் ஆண்டில் 3500 நுழைவுச் சீட்டுகளை அச்சிடுவதற்காக ரூபா 2,576,061 உம் என ரூபா 4,274,259 ஆன ஒதுக்கீடு செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறு பொது நுழைவுச் சீட்டு தொடர்பில் வருடாந்த விண்ணப்பங்களை கவனத்தில் கொள்ளாது அதிக அளவில் நுழைவுச் சீட்டுக்களை அச்சிடுவதற்கு பணத்தினை செலவு செய்தல் சிக்கனமற்ற செலவு என்பது அவதானிக்கப்பட்டது. | ஆண்டு மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் பார்வையாளர்களின் எண்ணிக்கையில் கவனத்தில் கொள்ளத் தக்க அளவு முன்னேற்றம் ஏற்கனவே ஏற்பட்டுள்ளது என்பதனால், மீண்டும் நுழைவுச் சீட்டுக்களை அச்சிடாது இந்த நுழைவுச் சீட்டு தொகையினையே பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

## 4.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய நூதனசாலை நூலகத்தினுள் 150 வருடங்களை விட பழமையான புத்தகத் தொகுப்பொன்று உள்ளதுடன், காலப்போக்கில் பாதுகாக்கப்பட முடியாத மற்றும் பயன்படுத்தப்பட முடியாத நிலைமைக்கு உட்பட்டுள்ள பல புத்தகங்கள் காணப்பட்டன. இவ்வாறு சேதமடைந்துள்ள புத்தகங்கள் தொடர்பில் நூலக அகற்றல் ஆவணம் நூலகப் பிரிவினுள் காணப்படாததுடன் அகற்றப்பட வேண்டிய புத்தகங்கள் தொடர்பில் | தற்போது நூலகத்தில் உள்ள பாதுகாக்கப்பட்டு பழைய நிலைமைக்கு கொண்டுவரப்பட முடியாத அனைத்து புத்தகங்களையும் ஆவணப்படுத்தி, அவற்றை இனம் காணுதல் மேற்கொள்ளப்படுதல் நூலக ஊழியர்களின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை நிறைவடைந்ததன் பின்னர் பொருத்தமான அகற்றல் சபையினை நியமித்து அவ்வாறு பழைய நிலைமைக்குக் | அகற்றப்பட வேண்டிய புத்தகங்கள் தொடர்பில் அகற்றல் சபை ஒன்று நியமிக்கப்பட்டு அதற்குரிய நியமங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | அகற்றல் சபை ஒன்று மற்றும் அதற்குரிய நியமங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொண்டுவரப்பட முடியாத புத்தகங்களை ஒழுங்கான முறைமைக்கு அமைய அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | தீயணைப்பு பாதுகாப்பு ஒழுங்கமைப்புடன் இணைந்ததாக நூலகத்தினுள் வளி சீராக்கி ஒழுங்கமைப்பும் செயல்படுத்தப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், சில மின்விசிறிகள் மட்டும் பொருத்தப்பட்டிருந்தன. பல வருடங்கள் பழமையான புராதன பெறுமதியினைக் கொண்ட புத்தகங்கள் மற்றும் சுவடிகளைப் பாதுகாப்பாக இன்னும் நீண்ட காலத்திற்கு உள்நாட்டு வெளிநாட்டு வாசகர்கள் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல் திணைக்களத்தின் கடமைப் பொறுப்பான போதிலும், இந்த புத்தகங்களைப் பேணுவதற்கு உகந்த மட்டத்தில் காணப்பட வேண்டிய மின் வெளிச்சம் வளி சீராக்கி நிலைமைகளைப் போன்றே ஈரப்பதனைகே கட்டுப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி இருக்காதால் பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் சேதமடையும் ஆபத்து காணப்படுகின்றது. அவ்வாறே நூலக வளாகத்தினுள் காணப்பட வேண்டிய வசதியான சூழல் இல்லாமை மற்றும் அதிக தூசிகளுடனான நிலைமை காணப்படுகின்ற காரணத்தால் பணியில் ஈடுபடும் ஊழியர்கள் சுவாச நோய் மற்றும் தோல் நோய்களால் எளிதில் பாதிக்கப்படக் கூடியதாக உள்ளது. | தூசி நிலைமை அதிகமாக ஏற்படுவது மேல் மாடியில் காட்சிக்காகப் பார்வையாளர்கள் நடமாடுவதன் காரணமாக என்பதால் அந்த மாடியில் மர தளத்திற்கிடையில் இருந்து நூலகத்திலும் தூசி விழுகின்ற காரணத்தால் ஆகும். அதனால் நூலகத்தில் வளி சீராக்கி ஒழுங்கமைப்பு செயல்படுத்துவதன் தேவைப்பாடு காணப்படுகின்றது. அதனால் எதிர்காலத்தில் அது தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்திடம் இருந்து திட்டம் மற்றும் மதிப்பீட்டினைப் பெற்றுக்கொண்டு நிதி ஒதுக்கீட்டினைப் பெற்று ஆகக் குறைந்தது நூலகத்தின் வாசிப்புசாலை உள்ளிட்ட சுவடிகள் தொகுப்பு மற்றும் அரிய புத்தகத் தொகுப்பு காணப்படுகின்ற பிரிவுகளுக்கு வளி சீராக்கி இயந்திரத்தினைப் பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | புத்தகங்கள் சேதமடையும் ஆபத்தினை தவிர்ப்பதற்கு மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு வாசகர்களுக்கு வசதியான சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திணைக்கள புவியியல் பிரிவில் 272 மாணிக்கக் கற்கள் இலங்கை வங்கி மெட்ரோபொலிடன் கிளையில் 1964 செப்டெம்பர் 18 ஆம் திகதி முதல் வைப்பு செய்யப்பட்டு காணப்படுவதுடன், 1993 ஆம் ஆண்டில் மேற்கொண்ட பௌதீக பரீட்சிப்பின் போது அவற்றில் ஒரு கல் செயற்கை கல்லென வெளிப்படுத்தப்பட்ட பின்னர் அந்தக் கல் புவியியல் பிரிவில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் இரத்தினவியலாளர் ஒருவரின் உதவியைப் பெற்று இந்த எஞ்சிய 271 மாணிக்கங்களின் பெறுமதியை மதிப்பிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக அமைச்சு செயலாளரின் அனுமதியினைப் பெற்றுக்கொண்டு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்று தொடர்பில் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைக்கு பதில் வழங்கும் முகமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 மார்ச் மாதம் வரையிலும் அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மாணிக்கக் கல் தொகுப்பினை பரீட்சிப்பு செய்வதற்கு அவற்றை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என அவர்கள் எழுத்து மூலம் தெரிவித்துள்ளனர். எனினும் 2024 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டில் இடம்பெற்ற திணைக்கள கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் இந்த மாணிக்கக் கல் தொகுப்பினை வெளியே கொண்டு செல்வது ஆபத்தானது எனத் தீர்மானிக்கப்பட்டதனால் அந்த பணி இதுவரையிலும் தாமதம் அடைந்துள்ளது. எனினும் இந்த மாணிக்கக் கல் தொகுப்பின் எடை அளவுகளைக் கொண்ட புகைப்படங்களை பெற்றுக்கொண்டு முறையான அறிக்கை இடுவதற்கு குழு ஒன்று பெயரிடப்பட்டு அனுமதிக்காக அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அனுமதி கிடைத்ததன் பின்னர் வங்கி வளாகத்தின் உள்ளேயே இந்த மாணிக்கக் கல் தொகுப்பினை முறையாக புகைப்படம் எடுத்து எடை அளவீடுகள் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | தற்போதைய நிதிப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பது. |
| (ஈ) | 2024 திசெம்பர் 31 திகதி கொழும்பு, கண்டி மற்றும் பொலனறுவை நூதனசாலைகளை தவிர ஏனைய 08 நூதனசாலைகளில் CCTV கெமரா தொகுதிகள் | CCTV கெமரா தொகுதிகள் பொருத்தப்பட்டது அந்தந்த நூதன சாலைகள் முகம் கொடுப்பதற்கு நேரிட்ட அச்சுறுத்தல்களின் | தொல் பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தி இருக்காத காரணத்தால் தொல் பொருட்கள் பாதுகாப்பின்றி காணப்பட்டது. | வரிசைப்படியாகும். அனைத்து நூதன சாலைகளிலும் CCTV கெமரா தொகுதிகளைப் பொருத்துவதற்கு நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்ளுதல் கடினமான விடயமாகும். அதனால் வருடத்திற்கு வருடம் அந்தந்த நூதன சாலைகளில் நிலவும் அச்சுறுத்தல், தொல்பொருட்களில் தொகுப்பு என்பவற்றைக் கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் ஏனைய நூதன சாலைகளுக்கும் CCTV கெமரா தொகுதியினைப் பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (உ) | 2024 ஆம் ஆண்டுக்காக நடத்தப்பட்ட தொல்பொருள் கணிப்பாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், இந்தப் பொருட்கள் கணிப்பாய்வின் போது, நடைமுறையில் எழும் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தொல்பொருட்களின் தரவு ஒழுங்கமைப்பொன்றைத் தாபிப்பதற்கு வரிக் குறியீட்டுடனான தொகுதிக்கு (Barcode System) சேர்த்துக் கொள்வதன் மூலம் வருடாந்த கணிப்பீட்டுப் பணியினை இலகுபடுத்திக் கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது தொல்பொருட்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதற்கான தரவு ஒழுங்கமைப்பொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. அந்த ஒழுங்கமைப்பு உருவாக்கப்பட்டு முடிவடைந்ததன் பின்னர் அனைத்து பிரிவுகள் மற்றும் நூதன சாலைகளில் தொல்பொருட்கள் அந்த தரவு ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொல்பொருட்களின் மேற்பரப்பில் Barcode ஒட்டுதல் அந்த தொல்பொருளுக்கு தீங்கானது என்பதனால் அதனை தொல்பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ள முடியாது. அதனால் முறையான தரவு ஒழுங்கமைப்பொன்றைத் தயாரிப்பதன் மூலம் அவற்றை பல்வேறு தேவைப்பாடுகளுக்கு இலகுவாகக் கையாளக் | தொல்பொருட்களின் கணிப்பாய்வின் போது எழுகின்ற நடைமுறை சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பது. |

கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2017 நவம்பர் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைய பொலனறுவை புராதன தொழில்நுட்ப நூதனசாலைக்குத் தேவையான தகவல்கள், தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்தும் போது விலை மனு கோராது ஸ்ரீலங்கா டெலிகாம் மற்றும் ஸ்ரீ லங்கா மொபிடெல் ஆகிய நிறுவனங்களில் இருந்து உதவியினை பெற்றுக் கொள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 3,510,188 (வரியுடன்) தொகைக்கு ஸ்ரீலங்கா மொபிடெல் நிறுவனத்தின் மூலம் M Gate முறையினைப் பயன்படுத்தி நுழைவுச்சீட்டு வழங்கும் முறைமை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்த முறைமை 2019 ஏப்ரல் 05 ஆம் திகதி தொடக்கம் இரு தரப்பினரிடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த முறைமையினுள் டிக்கெட் அச்சிடும்போது ஒரு சில தொழில்நுட்ப சிக்கல்கள் காணப்படுவதுடன், அதன் சீரியல் இலக்கம் அல்லது தொடர் இலக்கம் அச்சிடப்படாமை, டிக்கெட் அச்சிடுவதற்கு முன்னர் அவை பெட்டியொன்றினுள் அடைக்கப்பட்ட தொகுப்பாகக் காணப்படுவதுடன், அவற்றில் 1,000 டிக்கெட்டுகள் இருப்பதாக மொபிடெல் நிறுவனம் குறிபிட்ட போதிலும், டிக்கெட்டினை எண்ணிப் பார்க்கையில் பல்வேறு தொகுதிகளில் பல்வேறு எண்ணிக்கையிலான டிக்கெட்டுகள் காணப்பட்டமை, இந்த

பொலனறுவை புராதன தொழில்நுட்ப நூதனசாலையில் டிக்கெட் வழங்கும் முறைமையில் ஒரு சில தொழில்நுட்ப மற்றும் பல்வேறு காரணங்களில் அடிப்படையில் சிக்கல் நிலைமை காணப்பட்டது. இந்த டிக்கெட் புத்தகம் அச்சிடுகையில் அதன் சீரியல் இலக்கம் அல்லது தொடர் இலக்கம் அச்சிடப்படாமை, டிக்கெட் அச்சிடுவதற்கு முன்னர் அவை பெட்டியில் அடைக்கப்பட்ட தொகுப்பாகக் காணப்படுவதுடன், அவற்றில் 1,000 டிக்கெட்டுகள் இருப்பதாக மொபிடெல் நிறுவனம் குறிப்பிட்ட போதிலும், டிக்கெட்டுகளை எண்ணிப் பார்க்கையில் பல்வேறு தொகுதிகளில் பல்வேறு எண்ணிக்கையில் டிக்கெட்டுகள் காணப்பட்டமை, இந்த ஒழுங்கமைப்பில் எழுந்துள்ள தொழில்நுட்ப குறைபாடுகள் மொபிடெல் நிறுவனத்தினாலேயே நிகழ்நிலை முறைமையின் மூலம் தீர்க்கப்பட வேண்டி உள்ளமை மற்றும் அதற்கு பாரிய காலத்தினை செலவிட வேண்டும் என்பதனால் அதற்கிடையில் டிக்கெட் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட முடியாமை போன்ற சிக்கல்கள் காணப்படுவதுடன், டிக்கெட் தொகுதியிலும் காணப்படுகின்ற ஒரு சில டிக்கெட்டுகள் அச்சு இயந்திரத்தில் அச்சிட முடியாமை மற்றும் அதன் போது அவற்றை அகற்ற நேரிடுதல் போன்ற

06 ஆண்டு காலம் தொட்டு நிலவும் இந்த தொழில்நுட்ப சிக்கலைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பது

| | | |
|---|---|---|
| ஒழுங்கமைப்பில் எழுந்துள்ள தொழில்நுட்ப குறைபாடுகள் மொபிடெல் நிறுவனத்தினாலேயே நிகழ்நிலை முறைமையின் மூலம் தீர்க்கப்பட வேண்டி உள்ளமை மற்றும் அதற்கு பாரிய காலத்தினை செலவிட வேண்டும் என்பதனால் அதற்கிடையில் டிக்கெட் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட முடியாமை போன்ற சிக்கல்கள் காணப்படுவதுடன், டிக்கெட் தொகுதியிலும் காணப்படுகின்ற ஒரு சில டிக்கெட்டுகள் அச்சு இயந்திரத்தில் அச்சிட முடியாமை மற்றும் அதன் போது அவற்றை அகற்ற நேரிடுதல் போன்ற விடயங்களும் காணப்படுவதாகக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலும் 06 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இந்த தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடைமுறை சிக்கல்கள் காணப்படுகின்றன. இதன் காரணமாக இந்த முறைமையினை ஏனைய நூதன சாலைகளுக்கு அறிமுகப்படுத்தாது புதிய இணைய தளத்தின் மூலம் நிகழ் நி டிக்கெட் முறைமை ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |

## 5. மனித வள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 566 ஆக இருந்த போதிலும், உண்மையான பதவியணியினர் 393 ஆக இருந்ததனால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 173 ஆகும். இந்த வெற்றிட எண்ணிக்கை நிறைவேற்றுத் தரத்தில் 16 பதவிகளில் 07 பதவிகளும் மற்றும் 05 மூன்றாம் நிலை பதவிகளில் 03 உம், | 2024.12.31 ஆம் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட 566 பதவியணியினரிடையே உண்மையான பதவியணியினர் 393 ஆக உள்ளதுடன், மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 173 ஆகும். மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 173 ஆன போதிலும், உண்மையான பதவியணியினரின் கீழ் திணைக்களத்தின் நியதிச் சட்ட பொறுப்பு அதிகபட்ச | அவசியமான சேவைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து நிறுவனத்தின் செயலாற்றுகையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பது. |

இரண்டாம் நிலை பதவிகளில் 121 உம், ஆரம்பத் தர பதவிகளில் 42 உம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், சுமார் 15 வருடங்கள் தொடக்கம் தேசிய நூதனசாலையில் அதி உயர் தர நூலகர் பதவி வெற்றிடமாகக் காணப்படுகின்றது.

செயலாற்றுகையுடன் பேணப்பட்டு வருகின்றது. நிறைவேற்றுத் தரத்தில், மூன்றாம் நிலையில், இரண்டாம் நிலையில் மற்றும் ஆரம்ப தர பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொடர்ச்சியாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் மாகாண நிர்வாக அமைச்சுக்கு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதி உயர் தர நூலகர் பதவியில் வெற்றிடம் காணப்பட்ட போதிலும், III ஆம் தரத்திலான நூலகர்கள் இருவரின் மேற்பார்வையின் கீழ் நூலக நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.